முருகப்பெருமான் துணை

**மகான் பரமானந்தர் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**15.05.2022**, ஞாயிற்றுக்கிழமை

1. அவதார ஞானியே அரங்கா
அண்ணலே ஞான தேசிகா
புவனம் காக்க மகாசக்தியாய் பூவுலகின்
அவதாரம் புரிந்த குருராசனே போற்றி
2. போற்றியே பரமானந்தன் யானும்
புகலுவேன் அரங்கனுக்கு அருளாசிதனை
ஆற்றல்பட சுபகிருது விடைத்திங்கள்
அறிவிப்பேன் ஏகதிகதி கதிரோன் வாரம்
(சுபகிருது வருடம் வைகாசி மாதம் 01 ம் நாள், 15.05.2022 ஞாயிற்றுக்கிழமை)
3. வாரமதில் உலகம் நலம்பெற
வழங்குவேன் அரங்கஞானி கேட்க
சோரமில்லா ஞான உலகம் படைக்க
சுத்தநெறி காட்டும் அரங்கனே சிறந்த ஞானி
4. ஞானியரின் உண்மை வழிகளை
நம்பி மக்கள் உலகில் வரவர
ஞானியாகும் வாய்ப்பு மக்களுக்கு கிட்டி
ஞாலமதில் சடுதி சித்திகளும் கூடும்
5. கூடவே அரங்கனே மக்களை மீட்கவந்த
குறையில்லா ஆறுமுகன் சக்தியால்
நாடெங்கும் இந்த ஞானவழிகள் சிறக்க
நன்மைதரும் நல்லுலகம் சடுதி அமையக்கூடும்
6. கூடவே அரங்கன் தொண்டர்கள்என
குவலயத்தில் மக்கள்சக்தி பெருகபெருக
நாடெங்கிலும் தர்மபலம் கூடி
ஞானவான்கள் ஆட்சி நடந்தேறும்
7. தேறவே அரங்கன் திருவடிபற்றி
தேசமெங்கும் மக்கள் படை பெருக
அறமெனும் சக்தி எங்கும் பரவி
அரங்கன் வழிகாட்டல் உறுதியாகும்
8. ஆகவே அரங்கனே கலியின் சிறந்தஞானி
அரங்கன் காட்டும் மார்க்கமே சிறந்தமார்க்கம்
வரமென அரங்கன் வழி மக்கள்வர
வையகம் நிலைஉயர்ந்து மாற்றம் காணும்
9. காணவே ஓங்காரக் குடில் எனும்
கந்தவேலன் அருளாசி புரிகின்ற ஞானக்குடிலை
ஞானவான்கள் தொடர்ந்து வருக வருக
ஞானபூமி ஆவது சடுதி உறுதி

10. உறுதி கொண்ட அரங்கனுக்கு பரமானந்தன்
உற்ற துணையாய் அருளாசி தன்னை
வருமுலகில் மக்கள் எல்லாம் ஞானவான்களாக
வழங்குகின்றேன் மகா சூட்சும நிலையில் தானே

11. தானுரைக்க அரங்கன் பலம் உலகம் அறிய அறிய
தரணியே ஞான ஆட்சி பெறும்
வானவர்கள் அரங்கனை தொடர்ந்து வர
வையகம் பெரும் மாற்றம் காணும்

12. காணவே அரங்கனுக்காய் உலக ஞானிகள் படை
கருணை கொண்டு இறங்கி அருளிவர
ஞானவான்கள் என மக்கள்நிலை உயர
நம்பிக்கை கொண்டு ஓங்காரக்குடில் நோக்கி வர வேண்டும்

அருளாசி முற்றும் முற்றே

—சுபம்—